முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 229/2018

இன்று 2022 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாள் இன்று இந்த பி.வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆர்.கார்த்திகேயன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : மனோகரி

தந்தை பெயர் : ராகவன்

வயது : 77

முதல் விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

18.04.1994 மற்றும் 11.05.1994 ம் தேதிஇந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழ்மாநிலக்குழு சென்னையிலிருந்து பிரதிவாதிக்கு வந்த சுற்றறிக்கை மற்றும் பத்திரிக்கை பி.வா.சா.ஆ.6

வாக்காளர் கணக்கெடுப்ப அட்டை பி.வா.சா.ஆ.7

பிரதிவாதி மகளின் திருமண அழைப்பிதழ் அசல் பி.வா.சா.ஆ.8

குடும்ப அட்டை அசல் பி.வா.சா.ஆ.9

ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.10 நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது

03.09.2007 ம் தேதியிட்ட கூட்டுறவு வங்கி வழங்கிய அத்தாட்சி மற்றும் புரோநோட் பி.வா.சா.ஆ.11 ஆகும்.

23.05.2021 ம் தேதியிட்ட வில்லங்கச் சான்றிதழ் பி.வா.சா.ஆ.12

08.10.2015 ம் தேதியிட்ட வில்லங்கச் சான்றிதழ் பி.வா.சா.ஆ.13

(பி.வா.சா.ஆ.6 மற்றும் 7 நகல் என வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒப்பம்.ஆர்.கார்த்திகேயன்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)
திருப்பூர்